இணைப்பு 1

[30-ம் பக்கத்தில் 341-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(இ) (1) 1972-ம் ஆண்டு டிசம்பர் மாத வெள்ளத்தால் வயல்கள் மண்மூடியதாலோ அல்லது மண் அரிப்பினாலோ பாதிக்கப்பட்டிருந்தால், அத்தகைய நிலங்களைச் சீர்திருத்தம் செய்யும் முழுச் செலவினையும் அரசு ஏற்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(2) வேளாண்மைத் துறையினர் மூலம் டிராக்டர்கள், புல்டோசர்கள் கொண்டு இச் சீர்திருத்த வேலையை செய்ய பணிக் கப்பட்டுள்ளது.

(3) புல்டோசர் அல்லது டிராக்டர்கள் புகுந்து வேலை செய்யக் கூடாத சிறு துண்டு நிலப் பகுதிகளில் மனித உழைப்பால் தத்தம் நிலங்களை ரயத்துக்களே சீர்திருத்தம் செய்தால், அதற் கேற்படும் செலவினைக் கீழ்க்கண்ட வாய்ப்புகள் அரசு ஈடு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது :—

(அ) சாகுபடி நிலங்களில் மூடிய அல்லது படிந்த மண் 1 அடி உயரத்திற்குட்பட்டிருந்தால் ரூ. 300 ஏக்கர் ஒன்றுக்கு ;

(ஆ) சாகுபடி நிலங்களில் மூடிய அல்லது படிந்த மண் 1 அடி உயரத்திற்கு மேற்பட்டால் ரூ. 400 எக்கர் ஒன்றுக்கு ;

(இ) மண் அரிமானத்தால் பாதிக்கப்பட்ட நிலமானல் ரூ. 300 எக்கர் ஒன்றுக்கு.

1974 மார்ச் 9]

மண் மூடிய, மண் அரிக்கப்பட்ட நிலங்களில் பண்படுத்தப் பட்ட நிலங்களின் பரப்பும், 1972-73, 1973-74 ஆகிய ஆண்டுகளில் அதற்கான மொத்தச் செலவு விவரங்களும் மாவட்ட வாரியாக கொடுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண். (1)	மாவட்டம். (2)	13–9–73 அன்றுள்ளபடி, பண்படுத்தப்பட்ட நிலத்தின் பரப்பு (எக்டேரில்). (3)		1972-73-ம் ஆண்டிலும், 1973-ம் ஆண்டிலும் 13–9–73 அன்றுள்ள வரையில் ஆகிய மொத்த செலவு. (4)
				ரூ.
1	தென்னாற்காடு	8,559.50	(இன்னும் முடிக்கப் படவில்லை)	71,96,460.00
2	கோயம்பத்தூர்	519.25	(முடிக்கப்பட்டது)	3,33,000.00
3	சேலம்	680.93	,,	3,93,660.00
4	தருமபுரி	272.12	,,	1,68,300.00
5	திருச்சி	282.78	,,	2,13,060.00
6	தஞ்சாவூர்	54.46	,,	88,020.00
	மொத்தம் ..	10,359·04		83,92,500·00

இணைப்பு 2

[743 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

அவை முன் வைக்கப்பட்ட அறிக்கை.

பொருள்.—விதிக்கப்பட்டுள்ள கூடுதல் விற்பனை வரி வீதத்தை உயர்த்துதல்.

ஆண்டொன்றுக்கு ரூபாய் 10 லட்சத்துக்கு மேற்பட்டு மொத்த வியாபாரத் தொகை உடைய வணிகர்களுக்குக் கூடுதல் வரி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS